## 11.6 1998–99ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள்

திட்டம் மற்றும் வளர்ச்சி(மா.தி–2 ) துறை

அரசாணை (நிலை) எண் 94

நாள் : 15.06.1998

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.83, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 26.05.1993
2. அரசு ஆணை (நிலை) எண்.148, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 27.08.1993
3. அரசு ஆணை (நிலை) எண்.17, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 11.02.1994
4. அரசு கடிதம் எண்.3349/மாதி/94–2, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 30.05.1994
5. அரசு ஆணை (நிலை) எண்.115, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 08.08.1994
6. அரசு ஆணை (நிலை) எண்.104, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 22.08.1995
7. அரசு ஆணை (நிலை) எண்.105, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 22.08.1995
8. அரசு ஆணை (நிலை) எண்.156, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 13.12.1995
9. அரசு ஆணை (நிலை) எண்.82, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி) துறை, நாள் 09.08.1996
10. அரசு ஆணை (நிலை) எண்.84, திட்டம் மற்றும் வளர்ச்சித் (மா.தி–2) துறை, நாள் 14.07.1997
11. உறுப்பினர் – செயலாளர், மாநிலத் திட்டக்குழு, சென்னை–5 அவர்களின் கடிதம் எண்.5420/மாதிகு/மாதி/98, நாள் 11.05.1998

**ஆணை**

மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டம் 1993–94ம் வருடம் ரூபாய் 20.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர இதர மாவட்டங்களில் ஊரக மற்றும் நகர்ப்புற மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் வகையில் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1997–98–ஆம் வருடம் ரூ.35.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1998–99 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு

மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்தினை 1998–99 ஆம் ஆண்டில் செயல்படுத்திட ரூபாய் 35.00 கோடியில் (ரூபாய் முப்பத்தைந்து கோடி மட்டும்) 50 விழுக்காடு மக்கள் தொகை அடிப்படையிலும் 50 விழுக்காடு பின்தங்கிய நிலையையும் அளவுகோலாகக் கொண்டு சென்னை மாவட்டம் உட்பட எல்லா மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது. மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு பிற்சேர்க்கை 1–ல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினம் கீழ்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

''2515, ஏனைய ஊராக வளர்ச்சித் திட்டங்கள்– 101. ஊராட்சி நிறுவனம் – ஒன்பதாம் ஐந்தாட்டுத்திட்டப்பணிகள் – ஐஐ மாநிலத் திட்டம் – ஜே.எப். பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்திற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியுதவி – 09 – உதவி மானியங்கள். (து.தொ.கு.எண்.2515.00.101. ஜே.எப்.0903)

3. நிதியைப் பெற்றுக்கொள்ளலும், திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தலும்:

மாவட்டங்கள் தோறும் மாவட்டத் திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்து மாவட்ட திட்டக்குழு தலைவர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கு ஒப்பளிக்கப்படும் நிதியைப் பெற்று சம்மந்தப்பட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலுள்ள சம்மந்தப்பட்ட நிர்வாக அலுவலர், ஆணையர் அவர்களுக்கு வழங்குவார். இந்நிதி அஞ்சல் அலுவலக சேமிப்பு கணக்கில் பராமரிக்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளான ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியன தங்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தேர்வுசெய்து மாவட்ட திட்டக்குழுவிற்கு அனுப்பி வைக்கும். மாவட்ட திட்டக்குழு நிதி ஒதுக்கீடு அடிப்படையில் திட்டங்களை தேர்வு செய்யும். மேலும் மாவட்டத் திட்டக்குழு, மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்ட ஒதுக்கீட்டில் 60 விழுக்காடு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், 40 விழுக்காடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குமாக வரையறை செய்து நிதி ஒதுக்கீடு செய்யும்.

4. 1998–99 ஆம் ஆண்டு மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கு கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

(1) ஒப்பந்தப்புள்ளி கோருதல்:

ஒப்பந்தப்புள்ளி கோருதல், முடிவு செய்தல் போன்ற பணிகள் மேலே இரண்டு மற்றும் ஆறாவதாகப் படிக்கப்பட்ட ஆணைகளின் படி மேற்கொள்ளப்படவேண்டும்.

(2) பணிகளை தேர்வு செய்தல்:

மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தில் தேர்வு செய்யக் கூடாத பணிகள் பிற்சேர்க்கை 2–ல் சேர்க்கப்பட்டுள்ளது. மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு திட்டப்பணிக்கான செலவு ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும். மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்ட ஒதுக்கீட்டில் 20 விழுக்காடுக்கு மிகாமல் சாலை வசதிகளுக்கு பயன்படுத்த வேண்டும்.

(3) திட்டப்பணிகளை ஆய்வு செய்தலும் மேற்பார்வையிடுதலும்:

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டத்தை மாவட்ட திட்டக்குழு கண்காணிக்கும். இத்திட்ட செயல்பாடு குறித்த மாதாந்திர அறிக்கையை மாவட்ட ஆட்சியர் அடுத்துவரும் மாதங்களில் 5–ம் தேதிக்குள் மாநில திட்டக் குழுவிற்க்கு அனுப்புவார். சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களும், ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைச் சேர்ந்த அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் இத்திட்டப்பணிகளை அவ்வப்போது பார்வையிடுவர். மாநிலத் திட்டக்குழுவும் இத்திட்டச் செயல்பாட்டை பார்வையிட்டு அவ்வப்போது ஆய்வு செய்யும்.

(4) திட்ட செயல்பாடு:

மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒப்பளிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்புற திட்டங்கள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத் துறை, பேரூராட்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், கட்டிடமையம் போன்ற துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும்.

(5) மேற்பார்வையிடுதல் மற்றும் துறைக்கான செலவு (Supervision & Centage Charges):

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கட்டிடமையம் போன்ற துறைகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச்செலவு மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டப்பணியினுள் அடங்கும். அரசுத் துறைகளான பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் ஊரகத் தொழில் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, பேரூராட்சித் துறை போன்றவைகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு வழங்கப்படமாட்டாது.

(6) பொது

கணக்கு மற்றும் தணிக்கை, மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு மேலே இரண்டு மற்றும் ஏழில் படிக்கப்பட்ட அரசு ஆணைகளைப் பின்பற்ற வேண்டும்.

5. சென்னை மாவட்ட ஒதுக்கீடு

1998–99 ஆம் ஆண்டு மாவட்டப் பரவராக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் ரூ.142.69 இலட்சம் சென்னை மாவட்டத்திற்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தை பொறுத்தவரையில் சென்னை மாநகராட்சியே மாநகரப்பணிகளை கவனித்து வருவதால் சென்னை மாவட்டத்திற்க்கு ஒதுக்கப்பட்ட நிதியை சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5 அவர்களின் மேலொப்பத்துடன், சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை–79 மூலம் பெற்று அஞ்சலக சேமிப்பு கணக்கில் கணக்கு வைத்துவர வேண்டும். அந்நிதியைக்கொண்டு மாநகராட்சி மன்றம் தேர்ந்தெடுத்து ஒப்புதல் வழங்கும் பணிகளுக்கு சென்னை மாநகர ஆணையர் நிதி ஒதுக்கீடு செய்வார். ஒப்பந்தப்புள்ளி, கணக்கு மற்றும் தணிக்கை போன்றவற்றிற்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையைப் பின்பற்ற வேண்டும்.

6. மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் – செயலர் அவர்கள் 1998–99 ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி நிதி ஒதுக்கீடு குறித்த கருத்துருக்களை நிதித்துறைக்கு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.2154/ நி.செ / பி / 98 நாள் .5.1998/ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ப. பிரபாகரன்**
அரசு செயலாளர்

பிற்சேர்க்கை –1
மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டம் 1998–99
மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு

| வரிசை எண் | மாவட்டங்கள் | நிதி ஒதுக்கீடு 1998–99 (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | சென்னை | 142.69 |
| 2 | காஞ்சிபுரம் | 97.92 |
| 3 | திருவள்ளூர் | 92.60 |
| 4 | கடலூார் | 112.82 |
| 5 | விழுப்புரம் | 146.53 |
| 6 | வேலூார் | 188.20 |
| 7 | திருவண்ணாமலை | 156.87 |
| 8 | சேலம் | 136.91 |
| 9 | நாமக்கல் | 65.90 |
| 10 | தர்மபுரி | 184.84 |
| 11 | ஈரோடு | 154.90 |
| 12 | கோயமுத்தூார் | 132.26 |
| 13 | நீலகிரி | 93.75 |
| 14 | தஞ்சாவூர் | 111.44 |
| 15 | நாகப்பட்டினம் | 74.71 |
| 16 | திருவாரூர் | 59.68 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 110.88 |
| 18 | கரூர் | 43.66 |
| 19 | பெரம்பலூார் | 57.00 |
| 20 | புதுக்கோட்டை | 147.18 |
| 21 | மதுரை | 130.14 |
| 22 | தேனி | 61.08 |
| 23 | திண்டுக்கல் | 172.19 |
| 24 | ராமநாதபுரம் | 147.51 |
| 25 | விருதுநகர் | 109.65 |
| 26 | சிவகங்கை | 118.86 |
| 27 | தூாத்துக்குடி | 137.47 |
| 28 | திருநெல்வேலி | 162.82 |
| 29 | கன்னியாகுமரி | 149.54 |
| | மொத்தம் | 3500.00 |

**ப. பிரபாகரன்**
அரசு செயலாளர்

**பிற்சேர்க்கை–2**

மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டம் 1998–99ன் கீழ் தேர்வு செய்யக் கூடாத பணிகள்

1. மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களுக்கும், அரசு துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும், பணியாளர் கட்டிடம் கட்டுதல்.
2. வணிக நிறுவனங்கள், அந்நிறுவனங்கள், பதிவு பெற்ற நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான வேலைகள்
3. நீண்ட காலம் பயன்படும் சொத்துக்களைப் புதுப்பித்தல் முதலியவைகளுக்கான சிறப்புப் பழுதுபார்த்தல் பணி நீங்கலாக பழுது பார்ப்புப் பணிகளையும், நிர்வாகப் பணிகளையும் மேற்கொள்ளல்
4. மானியங்களும், கடன்களும் வழங்குதல்.
5. நினைவுச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும் கட்டுதல்.
6. இருப்பு செய்யத்தக்க எவ்விதமான பொருள்களையும் வாங்குதல்.
7. நில எடுப்புக்கும், நில எடுப்புக்கு இழப்பீடு வழங்குவதற்கும் செலவிடல்.
8. அனுமதியளிக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியாக அமைவது ஒருவருக்கு ஆதாயம் அளிக்கக்கூடிய சொத்துக்களுக்குச் செலவிடல்.
9. மத வழிபாட்டு இடங்களுக்குச் செலவிடல்.

**ப. பிரபாகரன்**
அரசு செயலர்